MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – II ISSUE – 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

# பண்பாட்டு விழுமியங்களில் வள்ளுவரின் விருந்தோம்பல்

திரு.மா.சிவஞானம்,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வுமையம்,
அய்யநாடார்ஜானகிஅம்மாள்கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.
sivagnanam_sf638@anjaconline.org - 7373214335
DOI 10.5281/zenodo.14913823.

**Abstract :**

Hospitality is one of the most important qualities of Tamil society. They welcomed newcomers who came to their home with joy, offered them hospitality, and provided them with food and a place to stay. Taking care of guests was considered an important duty in the household. Therefore, even in poverty, they were willing to entertain guests who came to their home. Not only the people but also the kings excelled in hospitality. The purpose of this article is to examine the prevalence of this hospitality among the people through the Thirukkural.

**Keywords** : Hospitality, guest, novelty, newcomers, sharing, life, agriculture, medicine, good food, sacrifice, anichamalar.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்ச் சமூகத்தின் தலையாயப் பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல். தம் இல்லம் தேடி வரும் புதியவர்களை இன்முகத்துடன் வரவேற்று, இன்சொல் கூறி, உண்ண உணவும், இருக்க இடமும் கொடுத்து உபசரித்தனர். இல்லறத்தில் விருந்தினரைப் பேணுதல் முக்கியக் கடமையாகக் கருதப்பட்டது. அதனால் வறுமையில் இருந்த போதும் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை உபசரிக்க விருப்பம் கொண்டனர். விருந்தோம்பலில் மக்கள் மட்டுமல்லாமல் மன்னர்களும் சிறந்து விளங்கினர். இவ்விருந்தோம்பல் பண்பு மக்களிடையே நிலவியதைத் திருக்குறள் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

விருந்தோம்பல், விருந்தினர், புதுமை, புதியவர்கள், பகிர்ந்துண்ணல்,இல்வாழ்க்கை, வேளாண்மை, மருந்து, நல்விருந்து, வேள்வி, அனிச்சமலர்.

## முன்னுரை

உலகிலுள்ள உயிர்கள் அனைத்தும் உணவின்றி வாழ்வதில்லை. மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்றில் முதல் இடம்பிடிப்பது உணவே ஆகும். நம் முன்னோர்கள் உணவின் அடிப்படைத் தேவைகளை நன்கு உணர்ந்து உண்டு வாழ்ந்தனர். மேலும், தாம் உண்பதோடு மட்டுமல்லாமல் உணவில்லாமல் வறுமையில் வாடியவர்களுக்கும் வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கும் உணவினை வழங்கி அவர்கள் உண்பதைக் கண்டு மகிழ்ந்தனர். முகத்தோற்றம் மாறினால் விருந்தினர் மனம் வருந்துவர் .அதனால் விருந்தினரை அன்போடு உபசரிக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தனர். ஒரு சமுதாயத்தின் அடையாளமாகவும் அந்தந்த நிலத்தின் பண்பாட்டை அடியொற்றியும் விருந்தோம்பல் அமைகிறது.

## விருந்தோம்பல் - சொல்விளக்கம்

விருந்தோம்பல் என்னும் சொல் இரண்டு சொற்களின் சேர்க்கையாகும். இச்சொல்லை விருந்து + ஓம்பல் எனப் பிரிக்கலாம். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தமிழ்அகராதி விருந்து


http://Creativecommons.org//license/by/4.0/.

என்பதற்கு, “புதுமை, உணவளித்துப்போற்றுதல், விருந்துண்போம்”(ப. 855) என்ற பொருளைக் கொடுக்கின்றது.

க்ரியாவின் தற்காலத் தமிழகராதியானது விருந்து என்னும் சொல்லிற்கு, “ஒருவரை அல்லது பலரை அழைத்து உபசரித்து வழங்கும் சிறப்பான உணவு என்றும் புலன்களை மகிழ்விக்கக் கூடியதாக அமைவதும்”(ப.90) என்று இரண்டு விளக்கங்களைத் தருகின்றது.

**தொல்காப்பியம் கூறும் விருந்து**

விருந்து என்ற சொல்லுக்குப் ‘புதுமை ’என்பது பொருளாகும். இச்சொல்லே ஆகுபெயராய் நின்று விருந்தினரைக் குறித்து வழங்கலாயிற்று. தொல்காப்பியம் புதியதாகத் தோன்றும் எல்லா இலக்கியங்களையும் ‘விருந்து’ என்ற பொருளில் குறிப்பிடுகின்றது.

**“விருந்தே தானும்**
**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே”(தொல்.செய்யு. 231)**

இதனை அடிப்படையாகக் கொண்டே புதியதாக வருபவர்களை விருந்தினர் என்கிறோம். இதன் காரணமாகவே ‘புதுமை, புதியவர்’ என்ற சொல்லாட்சிகளைக் கையாண்டுள்ளார். மனைவிக்கு உரிய மாண்புகளாக விருந்தோம்பலையும் சுற்றம் ஓம்பலையும் தொல்காப்பியர் சுட்டுகிறார். இதனை,

**“விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்”(தொல்.கற். 11)**

எனும் நூற்பா வழி விளக்குகின்றார். மேலும், இல்லறத்தில் கணவன் மனைவி இருவரும் இணைந்து விருந்தோம்ப வேண்டும் என்கின்றார்.

**இல்வாழ்க்கைக்கும் விருந்தோம்பலுக்கும் உள்ள தொடர்பு**

இல்லறவாழ்வு என்பது ஒரு ஆணும் ஒரு பெண்ணும் மணம் செய்து பொருள் ஈட்டி இன்பம் துய்ப்பதைச் சொல்வதாகும். ஆனால், இது மட்டும் இல்வாழ்வின் நோக்கமாக இருக்க முடியாது என்பதை உணர்ந்த வள்ளுவர்,

**“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது”(திருக். 45)**

என்று இல்வாழ்க்கை அதிகாரத்துள் முன்பே கூறியிருந்தாலும் மனைவி, மக்கள் ஆகியோரோடு கூடி வாழும் வாழ்க்கையில் விருந்தோம்பல் பண்பு சிறக்க வேண்டும். அப்பொழுது அது அறமாகி அவர்கள் வாழும் வாழ்க்கையின் பயனுமாகிறது. விருந்தோம்பாதார் இல்லறமும் பொருள்வாழ்வும் பயனற்றனவாம் என்கின்றார்.

விருந்தோம்பலைச் சமுதாயத்திற்கு நன்மை செய்யும் ஒரு தொண்டாகவே வள்ளுவர் வலியுறுத்துகிறார். இதனை,

**“துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை”(திருக். 42)**

என்னும் குறளில் துறவிகளுக்கும், வறியவர்கட்கும், ஆதரவற்றோர்க்கும் இல்லற வாழ்க்கையில் உள்ளவன் துணையாவான் என்கின்றார். மேலும், இக்கருத்தினை வலியுறுத்தவே விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தை எழுதினார் போலும். ஒருவன் இல்லறம் மேற்கொள்வதே விருந்தினரை வரவேற்று உதவி செய்வதற்குத் தான் என்பதை,

**“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு”(திருக். 81)**

எனும் குறளின் மூலம் வெளிப்படுத்துகிறார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**பகிர்ந்துண்ணும் பண்பு**

சாகாமல் இருக்கச் செய்யும் மருந்தாயினும் வஞ்சமின்றி அதனை விருந்தினருடன் பகுத்துண்ணல் வேண்டும் என்பதை,

**“விருந்து புறத்தாதத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று”(திருக். 82)**

இக்குறள் வழி கிடைத்தற்கரிய அமிழ்தமேயானாலும் விருந்தினரோடு உண் “மருந்தே ஆயினும் விருந்தோடு உண்”(கொன்றைவே.70) என்னும் ஔவையாரின் வாக்கினை நினைவுக் கூறுகிறது. மேலும், இச்செய்தியினைப் புறப்பாடல் ஒன்றும்(182) பதிவு செய்கிறது.

**விருந்தினரைப் பேணுதல்**

தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள்தோறும் போற்றுகின்றவனுடைய வாழ்க்கைத் துன்பத்தால் வருந்திக் கெடுவதில்லை. இதனை,

**“வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று” (திருக். 83)**

என்கின்றார். மேலும், நல்லறங்களைக் கைக்கொள்வோர் செல்வம் குறையாது என்பதை (திருக். 44, 94, 160, 227) ஆகிய குறட்பாக்கள் வழியும் விளக்கியுள்ளார்.

**விருந்தளிக்கும் முறைமை**

விருந்தினர்களை நல்ல முறையில் முகமலர்ச்சியோடு பேணுகிறவனின் இல்லத்தில் செல்வக் கடவுளான திருமகள் உள்ளம் மகிழ்ந்து அகலாது குடிகொண்டிருப்பாள் என்பதை,

**“அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்” (திருக். 84)**

என்று பதிவு செய்கிறார். அவர்களது வீட்டில் செல்வம் பெருகி வளம் கொழித்து வாழ்வான் எனச் சொல்லப்படுகிறது.

**விருந்தோம்பலின் பயன்**

வந்து கொண்டே இருக்கும் விருந்தினரை, இருக்கும் உணவைக் கொண்டு முதலில் பசியாறச் செய்வதும், பின்னர் மீதம் இருந்தால், தான் உண்பதும் மிகச் சிறந்த விருந்தோம்பல் பண்பாகும். நாளும் அவ்விதம் மிஞ்சுவதை உண்ணுவதும் அல்லது ஒன்றும் மிஞ்சா விட்டால் உண்ணாமல் உறங்குவதுமான வழக்கத்தைக் கொண்ட விருந்தோம்புவானைச் சிறப்பித்துச் சொல்லும் வகையில் அவனது விளைநிலத்தில் விதையிடாமலே விளைச்சல் கிடைக்கும் என்பதை,

**“வித்தும்இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சின் மிசைவான் புலம்”(திருக். 85)**

என்று புகழ்ந்தேத்துகிறார் வள்ளுவர். விருந்தோம்பல் பெருவாழ்வு அளிக்கவல்லது என்பதை வலியுறுத்தவே ‘வித்தும் இடல்வேண்டும் கொல்லோ’ என்கிறார். இதே நடையில் “பெய்யெனப் பெய்யும் மழை” (திருக்.55), “ஆக்கம் அதர்வினாயச் செல்லும்” (திருக்.594) போன்ற குறட்பாக்களை உணர்ச்சியுடன் கற்பனை கலந்து எழுதியுள்ளதைக் காண முடிகிறது.

மிச்ச உணவினை உண்பது குறித்துச் சங்க இலக்கியங்களான குறுந்தொகை (பாடல்எண். 233), குறிஞ்சிப்பாட்டு (அடி 204-26), மணிமேகலை (13-113) ஆகியவற்றிலும் கூறப்பட்டுள்ளன.

**நல்ல விருந்தாளி**


http://Creativecommons.org//license/by/4.0/.

விருந்துண்ட பின் செல்ல விரும்புவோரை வழியனுப்பி விட்டு, இனி வரப் போகும் விருந்தினரை எதிர்ப்பார்ப்பவன் விண்ணுலகத்திலுள்ளவர் எதிர்கொள்ளக் காத்திருக்கும் நல்ல விருந்தாளி ஆகிறான் என்பதை,

**“செல்விருந்து ஓம்பிவரு விருந்துபார்த் திருப்பான்**
**நல்விருந்து வானத்த வர்க்கு” (திருக். 86)**

என்கின்றார். விருந்தினரை ஏழடி நடந்து சென்று வரவேற்றலும் வழியனுப்புதலும் குறித்து“ காலினேழடிப்பின் சென்று” என்னும் அடியில் பொருநராற்றுப்படை(166) பதிவு செய்கிறது.

**விருந்தின் பயன்**

விருந்தோம்பலின் பயன் இவ்வளவு என்று சொல்லக் கூடிய ஒன்று இல்லை. அது அளவிடற்குரியது அன்று. அதனால் விருந்தோம்பும் தன்மையின் அளவினது ஆகும். உலகில் வைக்கப்படும் விருந்தும் வேள்வியே என்கிறார் வள்ளுவர். இதனை,

**“இனைத்துணைத்து என்பது ஒன்றுஇல்லை விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன்”(திருக். 87)**

என்று குறிப்பிடுகிறார். ஆகவே, விருந்தின் தன்மையளவே விருந்தோம்பலின் பயன் என்கிறார் வள்ளுவர்.

**பொருள் இழப்பு**

செல்வம் நிலையற்றது. செல்வத்தின் சிறந்த பயன் உணவிடுதல். உணவிட மனமில்லாது காத்து வைத்த செல்வம் எல்லாவற்றையும் இழந்த நிலையில் விருந்தோம்பாமல் வருந்துவது காலங்கடந்த உணர்தலாகி விடும் என்பதால்,

**“பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர்விருந் தோம்பி**
**வேள்வி தலைப்படா தார்”(திருக். 88)**

என்னும் குறளின் மூலம் வாய்ப்பு உள்ள போதே பசியாற்றல் என்னும் அறங்களைச் செய்க என்கின்றார்.

**விருந்தோம்பா மனநிலை**

பொருளில்லாத வறுமையாளன் விருந்தினரைப் போற்ற முடியாது. பொருளிருந்தும் விருந்தோம்பதாவனும் வறுமையாளனே. விருந்தினைப் பேணாமல் அப்பொருளை இறுகப் பிடித்துச் சேமித்து வைத்துக் கொள்ளலாம் என்பதற்காகவோ அல்லது விருந்தறம் செய்தால் வறுமைப்பட்டு விடுவோம் என்று அஞ்சி அதைக் காத்துக் கொள்வதும் மூடத்தனம் என்பதை,

**“உடைமையுள் இன்மை விருந்தோம்பல்ஓம்பா**
**மடமை மடவார்கண் உண்டு” (திருக். 89)**

என்கின்றார். இச்செய்தியினை இல்லாமையிலும் இல்லாமை என்று வந்த விருந்தினை ஓம்பாது கைவிடுதல் “இன்மையுள் இன்மை விருந்தொரால்” (திருக். 153) என்றும் பதிவு செய்கிறார்.

கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததைவிட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணி வருந்துகிறாள். இதனை,

**“...... தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை” (சிலம்பு. கொலைக்களம். 72-73)**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற அடிகள் மூலம் விருந்தினரைப் போற்றுதல் பழந்தமிழர் மரபு என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.

இதன்பொருட்டே தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்ததினையை உரலில் இட்டு குத்தியெடுத்து விருந்தினருக்கு இன்மையிலும் விருந்தளிக்கும் தலைவி பற்றி புறநானூறு (333) காட்சிப்படுத்துகிறது. இச்செய்தியினைப் பெரியபுராணம் இளையான்குடி மாற நாயனாரின் மூலம் பதிவு செய்கிறது.

**விருந்தோம்பும் முறை**

எல்லா மலருமே மென்மையானவை. அவற்றுள்ளும் மிக மென்மையானது அனிச்சமலர். அனிச்சமலரைப் போலவே விருந்தினர் உள்ளமும் மிக மென்மையானது. எளிதில் புண்படக் கூடியது. விருந்து கொடுப்பவன் முகம் மலராது திரிந்து பார்த்தாலே விருந்தினர் உள்ளம் வாடிவிடும் என்பதை,

**“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து”(திருக். 90)**

என்கின்றார். இச்செய்தியினை,

**“விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண**
**மேன்மேலும் முகமலரும் மேலோர்போல”(கலிங்கத்து. 477)**

என்ற அடிகளின் வழி செயங்கொண்டாரும் விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியுள்ளார். அனிச்சத்தின் மென்மை வள்ளுவரின் உள்ளதைக் கவர்ந்ததால் (திருக். 90, 1111, 1115, 1120) ஆகிய குறட்பாக்களில் பாடி மகிழ்ந்தார் போலும்.

**முடிவாக**

பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் விருந்தோம்பும் பண்பு தலையாயக் கடமையாக இருந்துள்ளதைத் திருக்குறள் உறுதிபடுத்துகிறது. இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் சங்க இலக்கியங்கள் துணை நிற்கின்றன. இன்றையச் சூழலில் புதிதாக வருபவர்களை அழைத்து உணவிடும் வழக்கம் குறைந்து வருவதைக் காணமுடிகிறது. அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக மனம் ஏற்பதில்லை. நண்பர்களும் உறவினர்களும் விருந்தினர் ஆயினர். இருப்பினும் திருவிழா, திருமணம், வளைகாப்பு, பிறந்தநாள், புதுமனை புகுவிழா போன்ற காலங்களில் மிகுதியான விருந்தினர்களை வரவேற்று உணவளித்து மகிழ்கிறோம். காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் விருந்தோம்பல் பண்பினை நாமும் பின்பற்றுவோம்.

**துணைநின்றவை**

1. கலிங்கத்துப்பரணி, புலியூர்க்கேசிகன், ரிதம்வெளியீடு, சென்னை, 2022.
2. குறிஞ்சிப்பாட்டு உரையும்-ஆய்வும், ருக்மணி இராமச்சந்திரன், காவ்யா பதிப்பகம், சென்னை, 2015
3. குறுந்தொகை மூலமும்விளக்கமும், இரா.இராகவையங்கார், சாரதாபதிப்பகம், சென்னை, 2016.
4. கொன்றைவேந்தன், உலகநீதி, மூதுரைமூலமும்உரையும், ந.மு.வேங்கடசாமிநாட்டார், கௌராபதிப்பகம், சென்னை, 2021.
5. சிலப்பதிகாரம் மூலமும்உரையும், புலியூர்க்கேசிகன், சாரதாபதிப்பகம், சென்னை, 2011.
6. திருக்குறள்தெளிவுரை, வீ.முனிசாமி (உ.ஆ), வானதிபதிப்பகம், சென்னை, 1989.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – II ISSUE – 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

7. திருக்குறள் மூலமும் உரையும், பரிமேலழகர் (உ.ஆ), அருணாபப்ளிகேஷன்ஸ், சென்னை, 2020.
8. தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1953.
9. தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், க.வெள்ளைவாரணன் (ஆ.உ), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1983.
10. புறநானூறு மூலமும் உரையும், புலியூர்க்கேசிகன், சாரதாபதிப்பகம், சென்னை, 2010.
11. பொருநராற்றுப்படை தெளிவுரை, நா.இளங்கோ, கங்கை புத்தக நிலையம், சென்னை, 2010.
12. மணிமேகலை, ந.மு.வேங்கடசாமிநாட்டார், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1946.

**அகராதிகள்**

1. க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி
2. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தமிழ் அகராதி


http://Creativecommons.org//license/by/4.0/.